## ஸம்ஸ்க்ருதத்திற்கு சரியான ஒரு லிபியின் அவசியம்

நமது ஸம்ப்ரதாயங்களில் ஸம்ஸ்க்ருத மொழியின் முக்கியத்துவத்தை நாம் அறிவோம். தமிழும் தெய்வீக மூலம் கொண்ட மொழியானாலும், தெய்வங்களைத் தமிழில் ஆசையுடன் துதித்தாலும், தொன்றுதொட்டு **அனுஷ்டானங்களை ஸம்ஸ்க்ருதத்தின் அடிப்படையில் நம் முன்னோர்கள் செய்திருக்கிறார்கள்**.

ஸம்ஸ்க்ருதத்தில், குறிப்பாக **அனுஷ்டானத்தில் ஒலி/உச்சரிப்பு மிக முக்கியம்** என்பதை நாம் அறிவோம். ஆகவே அனுஷ்டானத்திற்கான ஸங்கல்பம் ஶ்லோகங்கள் முதலியவற்றை **சரியானதொரு லிபியில்** எழுதவோ படிக்கவோ வேண்டும்.

தமிழ் மொழியை எழுதப் போதுமான வரிவடிவங்கள் தமிழ் லிபியில் உள்ளன. ஆனால் **ஸம்ஸ்க்ருதத்தில்** அதிக ஒலிகள் இருப்பதால் அதனை **எழுத அதிக வரிவடிவங்கள் தேவைப்படுகின்றன**. இதற்காகவே பழைய காலத்திலிருந்து க்ரந்த லிபி இருந்து வருகிறது. இக்காலத்திலோ தேவநாகரி ப்ரபலமாக உள்ளது.

தற்சமயம் **தமிழ் லிபியில்** பிற மொழி ஒலிகளைக் குறிக்க ஜ (ஶ) ஷ ஸ ஹ க்ஷ ஸ்ரீ ஆகிய (க்ரந்த) வரிவடிவங்கள் மட்டும் பயன்பாட்டில் உள்ளன. மேலும் தமிழ் **வல்லின வரிவடிவங்கள் க ச ட த ப ஐந்து மட்டுமே** உள்ளன. ஆனால் ஒவ்வொன்றுக்கும் நான்கு நான்காக **ஸம்ஸ்க்ருதத்தில் இருபது வல்லின ஒலிகள் உள்ளன**. அவ்வாறே **ரு லு போன்ற சிறப்பு உயிர் ஒலிகளையும் அனுஸ்வாரம் விஸர்க்கம் என்ற ஒலிகளையும்** குறிக்க தமிழ் லிபியில் **வரிவடிவங்கள் இல்லை**. ஆகவே தமிழ் எழுத்தை மட்டும் கொண்டு ஸம்ஸ்க்ருதத்தைச் சரியாக குறிக்க இயலாது.

குறிப்பாக வல்லின எழுத்துக்களுடன் க$_2$ க$_3$ க$_4$ என்று எண்களைப் பயன்படுத்தும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது. ஆனால் இந்த எண்களைக் கண்டுகொள்ளாமல் தமிழ் முறைப்படி படித்தால் ஒலிகள் மாறிவிடும் வாய்ப்பு அதிகம் உள்ளது. கோ$_3$பால என்பது கோ$_1$பா$_3$ல என்று ஒலிக்கும். பெரும்பாலானோர் இப்படித்தான் செய்கின்றனர்.

ஆகவே ஜ முதலியவற்றைப் போல் **மற்ற ஒலிகளுக்கும் அவைகளது க்ரந்த வரிவடிவத்தையே பயன்படுத்துவது** அர்த்தமுடையதாகிறது. இந்த தமிழ்+க்ரந்தம் கலந்த முறையிலும் நமது கோப்புகளை வெளியிட்டு வருகிறோம்.

க்ரந்தம் அல்லது தேவநாகரி என்ற முழு லிபியைக் கற்பதை விட **இந்த கலந்த முறைக்காக சில வரிவடிவங்களை மட்டும் கற்பது மிகவும் எளிதாகும்**. மனமிருந்தால் மார்க்கம் உண்டு. முடியாது என்று நினைக்கவேண்டியதில்லை.

ஆகவே **இந்த தமிழ்+க்ரந்தம் கலந்த முறையிலோ அல்லது முழு க்ரந்தம் அல்லது தேவநாகரி லிபியைப் பயன்படுத்தியோ ஸம்ஸ்க்ருதத்தை வாசிப்பதே சிறந்தது என்று வலியுறுத்துகிறோம்**. ஆகவே இயன்றவரை அந்த கோப்புகளையே பயன்படுத்தவும். இருப்பினும் பலரின் வேண்டுகோளுக்கிணங்க நடப்பு தமிழ்+234 முறையிலும் கோப்புகளை வெளியிட்டு வருகிறோம்.

ஹர ஹர ஶங்கர ௐ ஜய ஜய ஶங்கர








ஶ்ரீ-வேத$^{3}$வ்யாஸாய நம:

ஶ்ரீமத்$^{3}$-ஆத்$^{3}$ய-ஶங்கர-ப$^{4}$க$^{3}$வத்பாத$^{3}$-பரம்பராக$^{3}$த-
மூலாம்நாய-ஸர்வஜ்ஞ-பீட$^{2}$ம்
ஶ்ரீ-காஞ்சீ-காமகோடி-பீட$^{2}$ம்
ஜக$^{3}$த்$^{3}$கு$^{3}$ரு-ஶ்ரீ-ஶங்கராசார்ய-ஸ்வாமி-ஶ்ரீமட$^{2}$-
ஸம்'ஸ்தா$^{2}$நம்

# காரடையான் நோன்பு / Karadaiyan Nombu

**5127 விஶ்வாவஸு:-கும்ப$^{4}$: 30 14.03.2026**

**நோம்பு சரடு கட்டிக்கொள்ள வேண்டிய சமயம் மாலை 7:30–8:30**

மத்ர தேஶத்தின் ராஜாவான அஶ்வபதி குழந்தையின்மையால் கவலையுற்றார். ஒரு நாள் நாரதர் அங்கு வந்த போது, அவரிடம் தன் குறையை சொல்ல, நாரதர் ஸாவித்ரி தேவியை நினைத்து பூஜை, ஹோமங்கள் செய்தால் வழி பிறக்கும் என்று சொல்லி மறைந்தார். ராஜாவும் அவர் சொன்னபடியே செய்தார். ஸாவித்ரி தேவி அந்த ஹோமம் செய்த அக்னியிலிருந்து, தோன்றி ப்ரம்மதேவன் அனுப்பியதால் இங்கு வந்தேன். நீ செய்த தவத்திற்கு பலனாக நானே உனக்கு புத்ரியாக அவதரிப்பேன் என்று சொல்லி மறைந்தாள்.

சிறிது நாட்களுக்கப் பிறகு சொன்னபடியே அரசனின் பட்ட மஹிஷியான மாளவியின் வயிற்றில் ஸாவித்ரி தேவி பிறந்தாள். அவள் வளர்ந்து பருவ மங்கையானதும் அவளுக்கு திருமணம் செய்ய நினைத்தார்கள். அவளுடைய அழகிற்கு ஈடாக எந்த அரசகுமாரனும் இல்லை என்பதால் அஶ்வபதி ராஜா தன் மகளிடம் 'நீயே உனக்கேற்றவனைக் தேர்ந்தெடுத்து வா' என்று சொல்லி

அனுப்பினார்.

ஸாவித்ரி தேவியும் தேசமெங்கும் ஆராய்ந்தும் கிடைக்காமல் இருந்த போது, நாட்டை இழந்து காட்டில் வசிக்கும் சாலுவ தேசத்து அதிபதியின் மகனான ஸத்யவானை வனத்தில் கண்டாள். தன் தந்தையிடம் வந்து தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். அப்போது அங்கு வந்த நாரதர் அதைக் கேட்டுக் கலங்கினார். காரணம் என்ன என்று ராஜா கேட்டதற்கு நாரதர் சொன்னார். 'அந்த ஸத்யவான் ஒரு வருடத்தில் மரணம் அடைந்து விடுவான்' என்று. ராஜா தன் மகளிடம் 'நீ வேறு ஒருவரை வரித்து வா' என்று சொன்னார். ஆனால் ஸாவித்ரியோ மனதில் ஒருவரை வரித்த பின்பு வேறு ஒருவரைத் தேடுவது தர்மமல்ல. பாதிவ்ரத்யம் கெட்டு விடும். ஆகையால் அவரையே நான் மணப்பேன் என்று உறுதியாகக் கூறிவிட்டாள்.

நாரதர் அரசனிடம், ஸாவித்ரி அவள் மன திடத்தாலே எமனையும் வெற்றி பெறுவாள் என்று சொல்ல, அரசரும் அவள் விருப்பப் படியே காட்டிற்கு சென்று சத்தியவானிடம் கன்னிகா தானம் செய்து விட்டு வந்தார். காட்டில் ஸாவித்ரி பதிவிரதா தர்மத்திற்கு ஒரு குறையும் இல்லாமல் கணவனோடு வாழ்ந்து வந்தாள். கணவனுடைய மரண தேதியை அறிந்து இருந்ததால், காமாக்ஷி தேவியை நோக்கி கடுந்தவம் இருந்தாள். அந்த பங்குனி முதல் நாள் வந்தது. கடும் நோன்பு இருந்து உணவு இல்லாமல் இருந்தாள். காட்டில் விறகு கொண்டு வர கணவனுடன் சென்றாள். விறகு பிளக்கும் போது கணவன் உயிர் துறந்தான். ஸாவித்ரி தன் கணவனின் உயிரை மீட்க சபதம் கொண்டாள். கணவனுக்கு ஈமைக்கிரியைகள் செய்ய உறவினர்கள் வந்தபோது செய்ய அவள் அனுமதிக்கவில்லை. ஸாவித்ரி தனது கணவனின் உடலுடன் காட்டில் தனியாக அவன் உயிரை மீட்க காமாட்சி தேவியை நோக்கி பூஜித்தாள். பூஜையை தொடர்ந்து நடுவே எமன் தோன்றி 'உன்னுடைய பூஜைகள் அனைத்தும் வீண். உயிர் பிரிந்தது பிரிந்ததுதான்' என்று சொல்லியும் அவள் தன் விரதத்தை கைவிடவில்லை. காட்டில் கிடைத்த பூக்களையும், பழங்களையும் வைத்து பூஜித்தாள். அம்மைக்கு அமுது படைக்க விரும்பினாள். காடுகளில் ஏதும் கிடைக்காததால் அங்கே கிடைத்த களிமண்ணை அடையாகவும், கள்ளிப் பாலை வெண்ணெயாகவும் பாவித்து

பூஜை செய்தாள்.

எமதர்மன், ஸத்யவான் உயிரை எடுத்துச்சென்று கொண்டிருந்தார். ஸாவித்ரி விடாமல் பின் தொடர்ந்து சென்றாள். எமன் அவளைப் பார்த்து ‘என்னை ஏன் தொடருகிறாய்?’ என்று கேட்க ‘என் கணவன் உயிர் வேண்டும்’ என்றாள். வேறு எதை வேண்டுமானாலும் கேள் தருகிறேன், என்ற எமனிடம் ‘எனக்கு நூறு பிள்ளைகள் வேண்டும்’ என்று வரம் கேட்க, ‘தந்தேன்’ என்றார். தொடர்ந்து அவரைப் பின் தொடர்ந்து உங்கள் வரம் ‘பலிக்காமல் போகலாமா! கணவனில்லாமல் எப்படி உங்கள் வரம் எனக்கு பலிதமாகும்?’ என்றாள். எமதேவனுக்கு அப்போது தான் ஸாவித்ரி தேவியின் மதி நுட்பம் புரிந்தது. ஸாவித்ரியின் பூஜைகளையும், மதி நுட்பத்தையும் மெச்சி உள்ளங்குளிர்ந்து, கணவனுடைய உயிரை தந்ததோடு, இழந்த ராஜ்யத்தையும் அளித்தார்.

இவ்வாறு காலனையே கதி கலங்க வைத்து போராடி வெற்றி பெற்றதற்கு, ஸாவித்ரி செய்த நோன்பு தான் காரணமாகும். அப்படி ஸாவித்ரி செய்த பூஜையே இன்று நாம் அனைவரும் செய்யும் காரடையார் நோன்பு ஆகும். மாசி முடிந்து பங்குனி தொடங்கும் சமயம் அன்றைய தினம் ஸுமங்கலிகள் பூஜை செய்தால், அவர்களுடைய கணவரைப் பிரியாமல், தீர்க்க ஸுமங்கலிகளாக இருப்பார்கள் என்பதே அந்த நோன்பின் மகத்துவம்.

காட்டில் ஸாவித்ரி படைத்த மண் அடையை வெல்ல அடையாகவும், கள்ளிப்பாலை வெண்ணெயாகவும் நாம் அன்னைக்கு படைக்கிறோம். பூஜையின்போது “**உருகாத வெண்ணெயும், ஓரடையும் நான் உனக்கு தருவேன். கணவனை பிரியாத வரம் வேண்டும்**” என்று ஸுமங்கலிகள் அனைவரும் காரடையார் நோன்பு எனும் பூஜையை செய்தால் ஸாவித்ரி போல திடமான மனதையும், கொண்ட கொள்கையில் உறுதியும் காமாட்சி அன்னையின் அருளையும் பெறுவார்கள் என்பது ஶிஷ்டர்களின் கூற்று.

(விக்$^{4}$நேஶ்வரபூஜாம்’ க்ரு’த்வா)

மமோபாத்தஸமஸ்தது$^{3}$ரிதக்ஷயத்$^{3}$வாரா ஶ்ரீபரமேஶ்வரப்ரீத்யர்த$^{2}$ம்’ ஶுபே$^{4}$

ஶோப4நே முஹூர்தே அத்3ய ப்3ரஹ்மண: த்3விதீயபரார்தே4 ஶ்வேதவராஹகல்பே வைவஸ்வதமந்வந்தரே அஷ்டாவிம்’ஶதிதமே கலியுகே3 ப்ரத2மே பாதே3 ஜம்பூ3த்3வீபே பா4ரதவர்ஷே ப4ரதக2ண்டே3 மேரோ: த3க்ஷிணே பார்ஶ்வே அஸ்மிந் வர்தமாநே வ்யாவஹாரிகாணாம்’ ப்ரப4வாதீ3நாம்’ ஷஷ்ட்யா: ஸம்’வத்ஸராணாம்’ மத்4யே **விஶ்வாவஸு**-நாம-ஸம்’வத்ஸரே **உத்தராயணே** **ஶிஶிர**-ரு’தௌ **கும்ப4-பா2ல்கு3ந**-மாஸே **க்ரு’ஷ்ண**-பக்ஷே **ஏகாத3ஶ்யாம்’** ஶுப4திதௌ2 **ஸ்தி2ர**வாஸரயுக்தாயாம் **உத்தராஷாடா4**-நக்ஷத்ரயுக்தாயாம்’ **பரிக4**-யோக3யுக்தாயாம்’ **ப3வ**-கரணயுக்தாயாம் ஏவம்’-கு3ண-விஶேஷண-விஶிஷ்டாயாம் அஸ்யாம்’ **ஏகாத3ஶ்யாம்’** ஶுப4திதௌ2 மமோபாத்த-ஸமஸ்த-து3ரிதக்ஷயத்3வாரா ஶ்ரீபரமேஶ்வர-ப்ரீத்யர்த2ம்’ காமாக்ஷ்யா: ப்ரீத்யர்த2ம்’ காமாக்ஷ்யா: ப்ரஸாதே3ந மம தீ3ர்க4-ஸௌமாங்க3ல்ய-அவாப்த்யர்த2ம்’ மம ப4ர்துஶ்ச அந்யோந்யப்ராப்த்யர்த2ம் அவியோகா3ர்த2ம்’ ஶ்ரீகாமாக்ஷீ-பூஜாம்’ கரிஷ்யே।

(கலஶபூஜாம்’ க்ரு’த்வா)

## த்4யாநம்

ஏகாம்ரநாத2-த3யிதாம்’ காமாக்ஷீம்’ பு4வநேஶ்வரீம்|
த்4யாயாமி ஹ்ரு’த3யே தே3வீம்’ வாஞ்சி2தார்த2ப்ரதா3யிநீம்||
காமாக்ஷீம்’ த்4யாயாமி।

ஸர்வமங்க3ல-மாங்க3ல்யே ஶிவே ஸர்வார்த2தா3யிநி|
ஆவாஹயாமி கும்பே4(அ)ஸ்மிந் மம மாங்க3ல்ய-ஸித்3த4யே||
காமாக்ஷீம் ஆவாஹயாமி।

காமாக்ஷி வரதே3 தே3வி காஞ்சநேந விநிர்மிதம்|
ப4க்த்யா தா3ஸ்யே ஸ்வீகுருஷ்வ வரதா3 ப4வ சாஸநம்||
காமாக்ஷ்யை நம:, ஆஸநம்’ ஸமர்பயாமி।

க3ங்கா3தி3-ஸர்வ-தீர்தே2ப்4ய: நதீ3ப்4யஶ்ச ஸமாஹ்ரு’தம்|
பாத்3யம்’ ஸம்ப்ரத3தே3 தே3வி க்ரு’3ஹாண த்வம்’ ஶிவப்ரியே||
காமாக்ஷ்யை நம: பாத்3யம்’ ஸமர்பயாமி।

காமாக்ஷி ஸ்வர்ண-கலஶேநாஹ்ரு’தம்’ ச மயா ஶிவே|
மது4கைடப4-ஹந்த்ரி த்வம்’ த3தா3ம்யர்க்4யம்’ க்ரு’3ஹாண போ4:||

காமாக்ஷ்யை நம: அர்க்4யம்’ ஸமர்பயாமி।

ஆசம்யதாம்’ மஹாதே3வி ஏலோஶீர-ஸுவாஸிதம்|
த3தா3மி தீர்த2மமலம்’ க்ரு’3ஹீத்வா லோகரக்ஷகே||
காமாக்ஷ்யை நம: ஆசமநீயம்’ ஸமர்பயாமி।

மது4பர்கம்’ மயா தே3வி காஞ்சீபுர-நிவாஸிநி|
ஸ்வீக்ரு’த்ய த3யயா தே3ஹி சிரம்’ மஹ்யம்’ து மங்க3லம்||
காமாக்ஷ்யை நம: மது4பர்கம்’ ஸமர்பயாமி।

பஞ்சாம்ரு’தமித3ம்’ தி3வ்யம்’ பஞ்சபாதக-நாஶநம்|
பஞ்சபூ4தாத்மகே தே3வி பாஹி ஸ்வீக்ரு’த்ய ஶங்கரி||
காமாக்ஷ்யை நம: பஞ்சாம்ரு’த-ஸ்நாநம்’ ஸமர்பயாமி।

ஸ்நாஸ்யதாம்’ பாபநாஶாய யா ப்ரவ்ரு’த்தா ஸுராபகா3|
மயா(அ)ர்பிதா த்வம்’ க்ரு’3ஹ்ணீஷ்வ ப்ரீதா ப4வ த3யாநிதே4||
காமாக்ஷ்யை நம: ஸ்நாநம்’ ஸமர்பயாமி।

து3கூலாந்யம்ப3ராணீஹ வஸ்த்ராணி விவிதா4நி ச|
த3தா3மி ஹரதே3வீஶி வித்3யாதி4ஷ்டாந-பீடி2கே||
காமாக்ஷ்யை நம: வஸ்த்ரம்’ ஸமர்பயாமி।

உபவீதம்’ மயா ப்ரீத்யை காஞ்சநேந விநிர்மிதம்|
க்ரு’3ஹீத்வா தவ மே ப4க்திம்’ ப்ரயச்ச2 கருணாநிதே4||
காமாக்ஷ்யை நம: யஜ்ஞோபவீதம்’ ஸமர்பயாமி।

க3ந்த4ம்’ ஸுவாஸிதம்’ ரத்நம்’ குங்குமாந்விதம் அம்பி3கே|
க3ங்கா3நுஜே தே3ஹி மஹ்யம்’ தீ3ர்க4மங்க3ல-ஸூத்ரகம்||
காமாக்ஷ்யை நம: க3ந்தா4ந் தா4ரயாமி। ஹரித்3ராகுங்குமம்’ ஸமர்பயாமி।

கார்பாஸ-ஸூத்ரம்’ தா3ஸ்யாமி ஸுவர்ணமணி-ஸம்’யுதம்|
பூ4ஷணார்த2ம்’ மயா(ஆ)நீதம்’ தே3ஹி மே வரமுத்தமம்||
காமாக்ஷ்யை நம: மங்க3லஸூத்ரம்’ ஸமர்பயாமி।

ஜாதீசம்பக-புந்நாக3-கேதகீ-வகுலாநி ச|
மயா(அ)ர்பிதாநி ஸுப4கே3 க்ரு’3ஹாண ஜநநி மம||
காமாக்ஷ்யை நம: புஷ்பாணி ஸமர்பயாமி।

# அங்க3-பூஜா

| | |
|---|---|
| காமாக்ஷ்யை நம: | பாதௌ3 பூஜயாமி |
| கல்மஷக்4ந்யை நம: | கு3ல்பௌ2 பூஜயாமி |
| வித்3யாப்ரதா3யிந்யை நம: | ஜங்கே4 பூஜயாமி |
| கருணாம்ருʼத-ஸாக3ராயை நம: | ஜாநுநீ பூஜயாமி |
| வரதா3யை நம: | ஊரூ பூஜயாமி |
| காஞ்சீநக3ர-வாஸிந்யை நம: | கடிம்ʼ பூஜயாமி |
| கந்த3ர்ப-ஜநந்யை நம: | நாபி4ம்ʼ பூஜயாமி |
| புரமத2ந-புண்யகோட்யை நம: | வக்ஷ: பூஜயாமி |
| மஹாஜ்ஞாந-தா3யிந்யை நம: | ஸ்தநௌ பூஜயாமி |
| லோகமாத்ரே நம: | கண்ட2ம்ʼ பூஜயாமி |
| மாயாயை நம: | நேத்ரே பூஜயாமி |
| மது4ரவேணீ-ஸஹோத3ர்யை நம: | லலாடம்ʼ பூஜயாமி |
| ஏகாம்ர-நாதா2யை நம: | கர்ணௌ பூஜயாமி |
| காமகோடி-நிலயாயை நம: | ஶிர: பூஜயாமி |
| காமேஶ்வர்யை நம: | சிகுரம்ʼ பூஜயாமி |
| காமிதார்த2-தா3யிந்யை நம: | த4ம்மில்லம்ʼ பூஜயாமி |
| காமாக்ஷ்யை நம: | ஸர்வாண்யங்கா3நி பூஜயாமி |

# ஶ்ரீ காமாக்ஷ்யஷ்டோத்தரஶதநாமாவலி:

காலகண்ட்2யை நம:
த்ரிபுராயை நம:
பா3லாயை நம:
மாயாயை நம:
த்ரிபுரஸுந்த3ர்யை நம:
ஸுந்த3ர்யை நம:
ஸௌபா4க்3யவத்யை நம:
க்லீங்கார்யை நம:
ஸர்வமங்க3லாயை நம:
ஐங்கார்யை நம: 10
ஸ்கந்த3ஜநந்யை நம:
பராயை நம:
பஞ்சத3ஶாக்ஷர்யை நம:
த்ரைலோக்யமோஹநாதீ4ஶாயை நம:
ஸர்வாஶாபூரவல்லபா4யை நம:
ஸர்வஸங்க்ஷோப4ணாதீ4ஶாயை நம:
ஸர்வஸௌபா4க்3யவல்லபா4யை நம:
ஸர்வார்த2ஸாத4காதீ4ஶாயை நம:

ஸர்வரக்ஷாகராதி4பாயை நம:
ஸர்வரோக3ஹராதீ4ஶாயை நம: 20
ஸர்வஸித்3தி4ப்ரதா3தி4பாயை நம:
ஸர்வாநந்த3மயாதீ4ஶாயை நம:
யோகி3நீசக்ரநாயிகாயை நம:
ப4க்தாநுரக்தாயை நம:
ரக்தாங்க்3யை நம:
ஶங்கரார்த4ஶரீரிண்யை நம:
புஷ்பபா3ணேக்ஷுகோத3ண்ட3பாஶா-
ங்குஶகராயை நம:
உஜ்வலாயை நம:
ஸச்சிதா3நந்த3லஹர்யை நம:
ஶ்ரீவித்3யாயை நம: 30
பரமேஶ்வர்யை நம:
அநங்க3குஸுமோத்3யாநாயை நம:
சக்ரேஶ்வர்யை நம:
பு4வநேஶ்வர்யை நம:
கு3ப்தாயை நம:
கு3ப்ததராயை நம:
நித்யாயை நம:
நித்யக்லிந்நாயை நம:
மத3த்3ரவாயை நம:
மோஹிந்யை நம: 40
பரமாநந்தா3யை நம:
காமேஶ்யை நம:
தருணீகலாயை நம:
ஶ்ரீகலாவத்யை நம:
ப4க3வத்யை நம:
பத்3மராக3கிரீடாயை நம:
ரக்தவஸ்த்ராயை நம:
ரக்தபூ4ஷாயை நம:
ரக்தக3ந்தா4நுலேபநாயை நம:
ஸௌக3ந்தி4கலஸத்3வேண்யை நம: 50
மந்த்ரிண்யை நம:
தந்த்ரரூபிண்யை நம:
தத்வமய்யை நம:
ஸித்3தா4ந்தபுரவாஸிந்யை நம:
ஶ்ரீமத்யை நம:
சிந்மய்யை நம:
தே3வ்யை நம:
கௌலிந்யை நம:
பரதே3வதாயை நம:
கைவல்யரேகா2யை நம: 60
வஶிந்யை நம:
ஸர்வேஶ்வர்யை நம:
ஸர்வமாத்ரு’காயை நம:
விஷ்ணுஸ்வஸ்ரே நம:
வேத3மய்யை நம:
ஸர்வஸம்பத்ப்ரதா3யிந்யை நம:
கிங்கரீபூ4தகீ3ர்வாண்யை நம:
ஸுதவாபிவிநோதி3ந்யை நம:
மணிபூரஸமாஸீநாயை நம:
அநாஹதாப்3ஜவாஸிந்யை நம: 70
விஶுத்3தி4சக்ரநிலயாயை நம:
ஆஜ்ஞாபத்3மநிவாஸிந்யை நம:
அஷ்டத்ரிம்’ஶத்கலாமூர்த்யை நம:
ஸுஷும்நாத்3வாரமத்4யகாயை நம:
யோகீ3ஶ்வரமநோத்4யேயாயை நம:
பரப்3ரஹ்மஸ்வரூபிண்யை நம:
சதுர்பு4ஜாயை நம:
சந்த்3ரசூடா3யை நம:

புராணாக3மரூபிண்யை நம:
ஓங்கார்யை நம: 80
விமலாயை நம:
வித்3யாயை நம:
பஞ்சப்ரணவரூபிண்யை நம:
பூ4தேஶ்வர்யை நம:
பூ4தமய்யை நம:
பஞ்சாஶத்பீட2ரூபிண்யை நம:
ஷோடா3ந்யாஸமஹாரூபிண்யை நம:
காமாக்ஷ்யை நம:
த3ஶமாத்ரு’காயை நம:
ஆதா4ரஶக்த்யை நம: 90
அருணாயை நம:
லக்ஷ்ம்யை நம:
த்ரிபுரபை4ரவ்யை நம:
ரஹ:பூஜாஸமாலோலாயை நம:
ரஹோயந்த்ரஸ்வரூபிண்யை நம:
த்ரிகோணமத்4யநிலயாயை நம:
பி3ந்து3மண்ட3லவாஸிந்யை நம:
வஸுகோணபுராவாஸாயை நம:
த3ஶாரத்3வயவாஸிந்யை நம:
சதுர்த3ஶாரசக்ரஸ்தா2யை நம: 100
வஸுபத்3மநிவாஸிந்யை நம:
ஸ்வராப்3ஜபத்ரநிலயாயை நம:
வ்ரு’த்தத்ரயவாஸிந்யை நம:
சதுரஸ்ரஸ்வரூபாஸ்யாயை நம:
நவசக்ரஸ்வரூபிண்யை நம:
மஹாநித்யாயை நம:
விஜயாயை நம:
ஶ்ரீராஜராஜேஶ்வர்யை நம: 108

ஏகாம்ரநாத2-த3யிதே காஞ்சீபுர-நிவாஸிநி।
தூ4பம்’ க்ரு’3ஹாண தே3வி த்வம்’ ஸர்வாபீ4ஷ்ட-ப்ரதா3யிநி॥
காமாக்ஷ்யை நம: தூ4பம் ஆக்4ராபயாமி।

க்ரு’4தவர்தி-ஸமாயுக்தம்’ ஸர்வலோக-ப்ரகாஶகம்।
தீ3பம்’ க்ரு’3ஹ்ணீஷ்வ ஶுப4கே3 வாஞ்சி2தார்த2-ப்ரதா3யிநி॥
காமாக்ஷ்யை நம: தீ3பம்’ ஸந்த3ர்ஶயாமி।

கு3டா3பூபத்ரயம்’ தே3வி ஶாட4கம்’ ப்ரத3தா3ம்யஹம்।
நவநீதயுதம்’ தே3வி மோத3காபூபஸம்’யுதம்॥

பாயஸம்’ ஸக்ரு’4தம்’ த3த்3யாம்’ ஸப2லம்’ லட்3டு3காந்விதம்।
மம ப4ர்துஸ்ஸதா3 தே3வி க்ரு’3ஹீத்வா ப்ரீதிதா3 ப4வ॥
காமாக்ஷ்யை நம: நைவேத்3யம்’ நிவேத3யாமி।

பூகீ3ப2ல-ஸமாயுக்தம்’ நாக3வல்லித3லைர்யுதம்।
கர்பூரசூர்ணஸம்’யுக்தம்’ தாம்பூ3லம்’ ப்ரதிக்ரு’3ஹ்யதாம்॥
காமாக்ஷ்யை நம: கர்பூரதாம்பூ3லம்’ நிவேத3யாமி।

கர்பூரதீ3பம்' ஸுப4கே3 ஸர்வமங்க3ல-வர்த4நம்|
ஸர்வவ்யாதி4ஹரம்' தே3வி க்ரு'3ஹ்யதாம் அம்பி3கே ஶிவே||
காமாக்ஷ்யை நம: மம தீ3ர்க4ஸௌமாங்க3ல்யதா-ஸித்3த்4யர்த2ம்'
கர்பூர-நீராஞ்ஜநம்' ஸந்த3ர்ஶயாமி।

காந்தா காமது3கா4 கரீந்த்3ரக3மநா காமாரிவாமாங்ககா3
கல்யாணீ கலிதாவதாரஸுப4கா3 கஸ்தூரிகாசர்சிதா|
கம்பாதீரரஸாலமூலநிலயா காருண்யகல்லோலிநீ
கல்யாணாநி கரோது மே ப4க3வதீ காஞ்சீபுரீதே3வதா||

மங்க3லே மங்க3லாதா4ரே மாங்க3ல்யே மங்க3லப்ரதே3|
மங்க3லாட்4யே மங்க3லேஶே மங்க3லம்' தே3ஹி மே ப4வே||

நமோ தே3வ்யை மஹாதே3வ்யை லோகமாத்ரே நமோ நம:|
ஶிவாயை ஶிவரூபிண்யை ப4க்தாபீ4ஷ்டப்ரதா3 ப4வ||

காமாக்ஷி காஞ்சிநிலயே மம மாங்க3ல்யவ்ரு'த்3த4யே|
நமஸ்கரோமி தே3வேஶி மஹ்யம்' குரு த3யாம்' ஶிவே||
காமாக்ஷ்யை நம: அநந்தகோடி-ப்ரத3க்ஷிண-நமஸ்காராந் ஸமர்பயாமி।
காமாக்ஷீ ஸ்வரூபஸ்ய ப்3ராஹ்மணஸ்ய இத3மாஸநம் — ஸகலாராத4நை:
ஸ்வர்சிதம்

காமாக்ஷீ காம-வ்ரு'த்3த்4யர்த2ம்' மம மாங்க3ல்ய-ஸித்3த4யே|
உபாயநம்' ப்ரதா3ஸ்யாமி த3தா3மோக4ம்' வரம்' மம||
இத3ம்' ஹிரண்யம்' ஸத3க்ஷிணாகம்' ஸதாம்பூ3லம்' காமாக்ஷீ-ஸ்வரூபாய
ப்3ராஹ்மணாய ஸம்ப்ரத3தே3 ந மம॥

சரடு கட்டிக்கொள்ளும் போது சொல்ல வேண்டிய ஶ்லோகம்

தோ3ரம்' க்ரு'3ஹ்ணாமி ஸுப4கே3 ஸஹாரித்3ரம்' த4ராம்யஹம்|
ப4ர்துராயுஷ்ய-ஸித்3த்4யர்த2ம்' ஸுப்ரீதா ப4வ ஸர்வதா3||

# ஶ்ரீ-காமாக்ஷீ-சூர்ணிகா

ஶ்ரீ-சந்த்3ர-மௌலீஶ்வராய நம:। ஶ்ரீ-காமாக்ஷீ-தே3வ்யை நம:।

ஜய ஜய ஶ்ரீ-காம-கி3ரீந்த்3ர-நிலயே!

ஜய ஜய ஶ்ரீ-காமகோடி-பீட2-ஸ்தி2தே!

ஜய ஜய ஶ்ரீ-த்ரிசத்வாரிம்’ஶத்-கோண-ஶ்ரீசக்ராந்தரால-பி3ந்து3-பீடோ2பரி-லஸத்-பஞ்ச-ப்3ரஹ்ம-மய-மஞ்ச-மத்4ய-ஸ்த2-ஶ்ரீ-ஶிவ-காமேஶ-வாமாங்க-நிலயே!

ஜய ஜய ஶ்ரீ-விதி4-ஹரி-ஹர-ஸுர-க3ண-வந்தி3த-சரணாரவிந்த3-யுக3லே!

ஜய ஜய ஶ்ரீ-ரமா-வாணீந்த்3ராணீ-ப்ரமுக2-ரமணீ-கர-கமல-ஸமர்பித-சரண-கமலே!

ஜய ஜய ஶ்ரீ-நிகி2ல-நிக3மாக3ம-ஸகல-ஸம்’வேத்3யமாந-விவித4-வஸ்த்ராலங்க்ரு’த-ஹேம-நிர்மித-அநர்க4-பூ4ஷண-பூ4ஷித-தி3வ்ய-மூர்தே!

ஜய ஜய ஶ்ரீமத்3-அநவரதாபி4ஷேக-தூ4ப-தீ3ப-நைவேத்3யாதி3-நாநா-விதோ4பசாரை: பரிஶோபி4தே!

ஜய ஜய ஶ்ரீ-காஞ்சீ-நக3ர்யாம்’ த்3வாத்ரிம்’ஶத்3-த4ர்ம-ப்ரதிபாத3நார்த2-ஸ்தா2பித-ஹேம-த்4வஜாலங்க்ரு’தே!

ஜய ஜய ஶ்ரீ-ஸகல-மந்த்ர-தந்த்ர-யந்த்ர-மய-பரா-பி3லாகாஶ-ஸ்வரூபே!

ஜய ஜய ஶ்ரீ-காஞ்சீ-நக3ர்யாம்’ காமாக்ஷீதி ப்ரக்2யாத-நாமாங்கிதே!

ஜய ஜய ஶ்ரீ-மஹாத்ரிபுரஸுந்த3ரி ப3ஹு பராக்!

ஶுப4ம்॥